# DEPOSITION OF WITNESS

**In the court of Sub Court, Eraniel**
**S.C.No. 149/2025**
**Prosecution Witness - PW7**

| | | |
|---|---|---|
| Name | : | Mr.Basil Ephraims |
| Father's Name | : | |
| Age | : | |
| Calling | : | |
| Village | : | |
| Taluk | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 11.08.2026.

(Accused present.

முதல் விசாரணை–

நான் முட்டம் மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் நிலைய மருத்துவ அதிகாரியாக பணியாற்றுகிறேன். எனக்கு முன்பு CMO ஆக இருந்த மருத்துவர் மகீன் என்பவர் தனது வேலையை ராஜினாமா செய்து விட்டு சென்று விட்டார் அதனால் மருத்துவ கல்லூரி தலைவர் எனக்கு கடிதம் கொடுத்து நான் மருத்துவ கல்லூரிக்காக கோப்புகளின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 09.03.2024 அன்று திரு.சதாசிவம் 52 வயது அவர்கள் மாலை 6.45 மணியளவில் எங்களது மருத்துவமனையில் வினுகுமார் என்ற நிலை 1 போலீஸ்காரரால் சிகிச்சைக்காக கொண்டுவர பட்டார். அவரை வெளிநோயாளியாக சிகிச்சை அளிக்க பட்டது. அவரை பரிசோதிக்கும் போது அவர் சுய நினைவுடன் இருந்தார். அவருக்கு நெற்றி மற்றும் தலையில் பல காயங்கள் இருந்தது. அவை கீழ் வருமாறு, சிதைந்த காயங்கள் 4 காயங்கள் இருந்ததாக குறிப்பு எடுக்கப்பட்டு இருக்கிறது அது நெற்றியின் முன் பக்கத்தில்,4x1 சென்டிமீட்டர் அளவில் ஒரு சிதைந்த காயம்,6x1 சென்டிமீட்டரில் நெற்றியில் மற்றொரு காயம்,5x1 சென்டிமீட்டர் அளவில் நடுத்தலையில் ஒரு காயம், 4x1 சென்டிமீட்டர் அளவில் வலது பக்கம் நெற்றியில் ஒரு

காயம் காணப்பட்டது. அதற்காக அவருக்கு 14 தையல்கள் போடப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு இருக்கிறது. அங்கிருந்து அவர் அரசு மருத்துவக் கல்லூரி ஆசாரி பள்ளத்திற்கு மேல் சிகிச்சைக்காக அழைத்துச் செல்லப்பட்டு இருக்கிறார். எனக்கு மருத்துவக் கல்லூரி தலைவர் கொடுத்த கடிதம் அரசு தரப்பு சான்றாவணம் 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் மருத்துவ சான்றிதழ் மருத்துவர் மகீன் என்பவர் சதாசிவம் என்பவருக்கு கொடுத்த காய் சான்றிதழாகும் அது அரசு தரப்பு சான்ற அவனும் ஒன்பதாக குறியீடு செய்யப்படுகிறது. மருத்துவரை எனக்கு நேரடியாக தெரியும் அவருடைய கையெழுத்து தெரியுமா என்றால் தெரியும் மருத்துவ காய சான்றிதழில் உள்ளது அவருடைய கையெழுத்து தான். சதாசிவம் என்பவருக்கு ஏற்பட்ட காயம் சிறுகாயம் என்று கருத்துரை வழங்கப்பட்டிருக்கிறது.

<u>2 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

மருத்துவ சான்றிதழில் சதாசிவம் எத்தனை மணிக்கு சிகிச்சைக்கு சேர்க்கப்பட்டார் என்ற விவரம் இல்லை என்றால், ஆமாம். மருத்துவ சான்றிதழில் எந்த ஆயுதங்களால் காயங்கள் ஏற்படுத்தப்பட்டது என்ற விவரமும் இல்லை என்றால், ஆமாம். மருத்துவ சான்றிதழில் யாரால் காயம் ஏற்பட்டது என்ற குறிப்பு இல்லை என்றால், ஆமாம். இருசக்கர வாகனத்தில் இருந்து தவறி விழும்பொழுது முகத்தில் இது போன்ற காயங்கள் ஏற்படுவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்றால், ஆமாம். கன்னத்தில் காயம் எதுவும் இருந்ததாக மருத்துவ சான்றிதழில் இல்லை என்றால், ஆமாம். மருத்துவ சான்றிதழில் குறிப்பிட்டுள்ள காயங்கள் சிகிச்சைக்கு வந்ததிலிருந்து இரண்டு மணி நேரங்களுக்கு முன்பு கூட ஏற்பட்டிருக்க வாய்ப்பு இருக்கிறது என்றால், இருக்கலாம்.

<u>முதல் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

மருத்துவ சான்றிதழில் சம்பவம் நடந்த இடம் முட்டம் view point என்று இருக்கிறது என்றால் ஆமாம். 2ம் எதிரி தரப்பில் செய்ய பட்ட குறுக்கு விசாரணையை ஏற்று கொள்வதாக முதல் எதிரி தரப்பில் கூறப்பட்டது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
**இரணியல்.**

**DEPOSITION OF WITNESS**
**In the court of Sub Court, Eraniel**
**S.C.No. 149/2025**
**Prosecution Witness - PW8**

Name : Mr.Sanjay Dinu
Father's Name :
Age :
Calling :
Village :
Taluk :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 11.08.2026.

(Accused present)

முதல் விசாரணை–

நான் தேங்காய் பட்டணம் முள்ளூர் துறையில் குடியிருந்து வருகிறேன். நான் ஊர் காவல் படையில் பணி புரிந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியுமா என்றால் சதாசிவம் என்பவரது பிரச்சனையோடு பார்த்தது தான் அதன் பிறகு தெரியாது. 09.03.2024 ம் தேதி எனக்கும் சதாசிவம் சாருக்கும் முட்டம் கடற்கரையில் காலை 9 மணியில் இருந்து இரவு 8 மணி வரை பணி போட பட்டிருந்தது. மாலை 5.45 மணியளவில் பிரச்சனை ஏற்பட்டது. நான் அப்போது கீழே பீச்சில் நின்றேன். அவர் பிரச்சனை நடப்பதாக கூறி அப்போது தான் மேலே நிழல்குடை அருகில் சென்றார். அங்கு போன போது பொதுமக்களுக்கு எதிராக தகாத வார்த்தைகள் சாஜனும் பிரதீபாவும் பேசி இருக்கிறார்கள். அதன் பிறகு சதாசிவம் சார் விலக்கும் போதும் இரு எங்கள் ஊர் நாங்கள் இப்படிதான் பேசுவோம் நீங்கள் யார் இங்கு வர கூடாது என்று சொல்லி தள்ளி விட்டார்கள் அதன் பிறகு படி கட்டில் நின்று காலை வைத்து மார்பில் எட்டி உதைத்தார்கள். சதாசிவம் சார் கால் தடுமாறி கீழே விழுந்தார். அதன் பிறகு செங்கல் மற்றும் கருங்கல் எடுத்து தலையில் அடித்தார்கள். தலையில் இருந்து ரத்தம் வந்தது. செத்து தொலை நீ இங்கு வர கூடாது

என்று சொல்லி அவருடைய மொபைல் எடுத்து விட்டு சென்று விட்டார்கள் அதன் பிறகு குளச்சல் கடலோர காவல் நிலையத்தில் தகவல் சொல்லி வினு மற்றும் சுபாஷ் போலீஸ் வந்தார்கள். அதன் பிறகு அவரை முட்டம் KMMC மருத்துவ மனையில் கொண்டு சென்றார்கள். பிண்ட மோனே என்று அசிங்கமாக பேசினார்கள். அதன் பிறகு நான் திரும்பவும் முட்டம் பீச்சுக்கு வந்து விட்டேன். இதுசம்பந்தமாக என்னை போலீசார் விசாரித்தார்கள்.

<u>1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

எங்களுக்கு பணி ஒதுக்குவது ஹோம் காடு அதிகாரி என்றால் இல்லை நாங்கள் போஸ்டல் பகுதியில் வேலை பார்ப்பதால் காவல் நிலையத்தில் தான் பணி ஒதுக்குவார்கள். என்னுடைய பணி நேரம் மதியம் 2 மணி முதல் இரவு 8 மணி வரை என்றால், ஆமாம்.நான் பணிக்கு நேரடியாக முட்டத்துக்கு சென்று விட்டேன் என்றால் ஆமாம் காலையில் இருந்து இரவு வரை இருந்தேன். நான் பணிக்கு செல்வதற்கு முன்பு பதிவேட்டில் கையெழுத்து போடுவேன் என்றால் இல்லை.நான் சம்பவம் நடந்ததாக சொல்லும் நேரத்தில் முட்டம் பீச்சில் நின்று கொண்டிருந்தேன் என்றால் ஆமாம். நான் சத்தம் கேட்டு தான் மேலே வந்தேன் என்றால் ஆமாம். சம்பவம் நடந்ததாக சொல்லுகின்ற இடத்திற்கும் பீச்சுக்கும் இடையே 100 மீட்டர் தூரம் இருக்கும் என்றால், ஆமாம். முட்டம் கலங்கரை விளக்கத்திலிருந்து கீழே இறங்கி வருவது கிழக்கு மேற்கு ரோடு என்றால் ஆமாம்.வீட்டிலிருந்து களியப்பட்டினத்திற்கு போகின்ற ரோடு தெற்கு வடக்காக இருக்கும் என்றால், ஆமாம். அதற்கு மேற்குப் பக்கத்தில் பீச்சுக்கு இறங்கி வருவதற்கு சிமெண்ட் சாலை இருக்கிறது என்றால், ஆமாம். கார் பார்க்கிற்க்கு தெற்கு பக்கத்தில் தான் view point இருக்கிறது என்றால்

ஆமாம். நான் ஆய்வாளர் விசாரணையில் பின்னால் பெயர் விலாசம் கேட்டு தெரிந்து கொண்டு தெரிந்து கொண்டேன் என்று சொல்லியிருப்பதற்கு யாரிடம் கேட்டு தெரிந்து கொண்டேன் என்றால், காவல் நிலையத்தில் கேட்டு தெரிந்து கொண்டேன். முட்டம் கடற்கரையில் இருந்து KMMC மருத்துவமனை 5 கிலோமீட்டர் தூரம் வரை இருக்கும் என்றால், இருக்கும். நான் முட்டம் பகுதியில் பணியில் இருப்பதால் வெள்ளிச்சந்தை காவல் நிலையத்தின் போன் நம்பர் என்னிடம் இருக்கும் என்றால் சரியல்ல நான் போஸ்டல் காவல் நிலையத்தில் கட்டுப்பாட்டில் வேலை பார்ப்பதால் அந்த போன் நம்பர் தான் என்னிடம் இருக்கும்.

சதாசிவம் என்பவருக்கு குடிப்பழக்கம் உண்டு என்றால் ஆமாம் பணிக்கு வரும்போது குடிக்க மாட்டார். சதாசிவம் பணியில் இருக்கும் பொழுது அவருக்கும் பொது மக்களுக்கும் இடையே பிரச்சனைகள் வந்து கொண்டிருக்கும் என்றால், நான் பணியில் அவரை பார்க்கும் பொழுது அது போல் நடந்ததில்லை. நான் பணியில் இருக்கும் பொழுது மதிய உணவு முட்டம் துறைமுகத்திற்கு சென்று தான் சாப்பிடுவேன் என்றால், ஆமாம். அதனால் அங்கு உள்ளவர்கள் எல்லாம் எனக்கு நன்றாக பழக்கம் உண்டு என்றால், இல்லை. சதாசிவத்திற்கு பழக்கம் உண்டா என்றால், தெரியாது.நான் மருத்துவமனையில் இருந்து உடனடியாக பீச்சுக்கு திரும்ப வந்து விட்டேன் என்றால் கொண்டு போய் மருத்துவமனை வாசலில் விட்டு விட்டு வந்து விட்டேன். போலீஸ் அங்கு வந்ததெல்லாம் எனக்கு தெரியாது என்றால், ஆமாம். நான் சதாசிவத்திற்கு ஆதரவாக வேண்டுமென்றே நடக்காத ஒரு சம்பவத்திற்கு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், இல்லை. 1 ம் எதிரிக்கும் இந்த வழக்குக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் நான் நடந்ததை பார்த்தேன். நான் நடந்ததாக

பார்த்ததை பார்த்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் 1 ம் தேதிக்கும் இந்த வழக்குக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

<u>இரண்டாம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

எங்களுக்கு பணி ஒதுக்கீடு செய்வது ஒரு நாளைக்கு முன்பே சொல்லிவிடுவார்களா அல்லது காலையில் போய் தான் கேட்க வேண்டுமா என்றால், முதல் நாள் மாலையிலே தெரிவித்து விடுவார்கள். 09.03.2024 அன்று காலையில் கடலோர காவல் நிலையத்திற்கு சென்றேனா என்றால், இல்லை. முட்டம் பீச்சில் அன்றைய தினம் எத்தனை மணிக்கு காலையில் இருந்தேன் என்றால் காலையில் 9 மணிக்கு இருந்தேன். சதாசிவம் அன்றைய தினத்தில் முட்டம் கடற்கரைக்கு எத்தனை மணிக்கு வந்தார் என்றால் 9.30 மணிக்கு வந்து விட்டார். சதாசிவம் சீருடை அணிந்து இருந்தாரா என்றால், இல்லை.

நான் சீருடை அணிந்து இருந்தேனா என்றால், இல்லை.என்னுடைய டீசர்டிலும் சதாசிவனுடைய டீசர்டிலும் பின்புறத்தில் Marine Police என்று எழுதப்பட்டிருக்கும் அதுதான் அணிந்திருந்தோம். முட்டம் நிழற்குடையிலிருந்து முட்டம் பீச் 100 மீட்டர் தாழ்வில் இருக்கிறது என்றால் ஆமாம்.பொதுவாக முட்டம் கடற்கரையில் மாலை நேரத்தில் 2000 முதல் 3000 நபர்கள் இருப்பார்கள் என்றால் அவ்வளவு பேர் இருக்க மாட்டார்கள் 700 முதல் 800 பேர்கள் இருப்பார்கள். 09.03.2024 அன்று முட்டம் கடற்கரையில் எத்தனை பேர்கள் இருந்திருப்பார்கள் என்றால் இரண்டு ஸ்கூல் வேன் இருந்தது மொத்தம் 150 பேர்கள் இருந்திருப்பார்கள். முட்டம் கடற்கரை 100 சதுர மீட்டர் பரப்பளவு கொண்டது என்றால், ஆமாம். முட்டம் கடற்கரையில் அலைகள் வந்து பாறைகள் மீது மோதுவதால் சத்தம் அதிகமாக இருக்கும் என்றால், ஆமாம்.

முட்டம் கடற்கரையில் மேலே உள்ள ரோட்டில் இருந்து கீழே பீச் எவ்வளவு தூரத்தில் இருக்கிறது என்றால், 200 மீட்டர் தூரத்தில் இருக்கிறது.மேலே ரோட்டில் யாரும் பேசிக் கொண்டிருந்தால் கீழே கடற்கரையில் அலைகளின் சத்தம் அதிகமாக இருப்பதால் அந்த விவரம் கீழே உள்ள நபர்களுக்கு கேட்காது என்றால், ஆமாம்.மொத்தம் எத்தனை நிழற்குடைகள் அங்கு இருக்கிறது என்றால் மூன்று நிழற்குடைகள் இருக்கிறது. மேலே இருக்கக்கூடிய நிழற்குடை ரோட்டோடு சேர்ந்து இருக்கிறது என்றால், ஆமாம். அன்றைக்கு நான் பணிக்கு எந்த வாகனத்தில் சென்றேன் என்றால் என்னுடைய பைக்கில் சென்றேன். சதாசிவம் யாருடைய வண்டியில் வந்தார் என்றால் அவருடைய வண்டியில் வந்தார். சண்டை நடக்கின்ற விவரத்தை முதலில் யார் என்னிடம் சொன்னது என்றால் பொதுமக்கள் சொன்னார்கள். அவர்களின் பெயர் மற்றும் விவரங்கள் தெரியாது என்றால் ஆமாம்.

போலீஸ் என்னை விசாரிக்கும் பொழுது பொதுமக்கள் தான் சண்டை நடந்த விவரத்தை சொன்னார்கள் என்று நான் சொன்னேனா என்றால்சொன்னேன். முட்டம் KMMC மருத்துவமனைக்கும் முட்டம் பீச்சுக்கும் இடையில் அரசு மருத்துவமனை இருக்கிறது என்றால், எனக்கு தெரியாது. சதாசிவம் யாருடைய பைக்கில் மருத்துவமனைக்கு சென்றார் என்றால் என்னுடைய பைக்கில். நான்தான் மருத்துவமனையில் அவரை கொண்டு சேர்த்தேன் என்றால் நான் கொண்டு போய் வாசலில் விட்டு விட்டு வந்து விட்டேன். இரண்டாம் எதிரி தாக்கியதால் சதாசிவத்திற்கு எந்த காயமும் ஏற்படவில்லை என்றால், சரியல்ல கல் வைத்து மண்டையில் அடித்தார்கள்.நான் சொல்வது போல் எதிரிகள் சதாசிவத்தை தாக்கி இருந்தால் சதாசிவம் என்னுடன் பணியாற்றுகிற நபர் என்பதால்

நான் அவருடன் மருத்துவமனைக்குச் சென்று சிகிச்சையின் போது மருத்துவமனையில் இருந்திருப்பேன் என்றால், காவல் நிலையத்திலிருந்து போலீஸ் உடன் இருந்ததால் நான் வந்து விட்டேன்.இப்படி ஒரு சம்பவம் நடந்ததை தொடர்ந்து நான் marine காவல் நிலையத்திற்கு அல்லது வெள்ளிச்சந்தை காவல் நிலையத்திற்கு தகவல் கொடுத்தேனா என்றால், marine காவல் நிலையத்திற்கு நான் தகவல் கொடுத்தேன். Marine காவல் நிலையத்தில் யாரிடம் பேசினேன் என்றால் வினு சார் என்பவரிடம் பேசினேன். நான் மருத்துவமனைக்கு சென்ற வாகனத்தின் எண் தெரியுமா என்றால் தெரியாது. நான் மருத்துவமனைக்கு சதாசிவத்தை என்னுடைய வாகனத்தில் அழைத்து செல்லவில்லை என்பதால் தான் அந்த வாகனத்தின் எண் கூட எனக்கு தெரியவில்லை என்றால், என் வண்டியில் தான் அழைத்து சென்றேன். சதாசிவம் அன்றைய தினத்தில் எத்தனை மணிக்கு சாப்பிட சென்றார் என்றால் மதியம் 12.30 மணிக்கு சென்றார். சாப்பிட்டுவிட்டு எத்தனை மணிக்கு அங்கு வந்தார் என்றால் 1.15 மணிக்கு வந்தார்.சம்பவம் நடந்தது தொடர்பாக காவல் நிலையத்திற்கு நான் எழுத்து மூலமாக புகார் எதுவும் கொடுத்தேனா என்றால், இல்லை.போலீஸ் என்னை எத்தனாம் தேதி விசாரித்தார்கள் என்றால் அன்றைய தினம் இரவே விசாரித்தார்கள். எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் வீட்டில் வைத்து விசாரித்தார்கள். எத்தனை மணி இருக்கும் என்றால் 7 மணி இருக்கும். அதன் பிறகு என்றாவது என்னை போலீஸ் விசாரித்தார்களா என்றால், இல்லை. நான் இது தொடர்பாக வெள்ளிச்சந்தை காவல் நிலையத்திற்கு என்றைக்காவது சென்றேனா என்றால், இல்லை. அன்றைய தினத்தில் முட்டத்தில் உள்ள நிழற்கூடத்தில் எவ்வளவு கூட்டம் இருந்தது என்றால், நிழற்குடையில் ஆளில்லை. கார் பார்க்கிங்கில்

ஆட்கள் இருந்தார்களா என்றால், இருந்தார்கள் எவ்வளவு ஆட்கள் இருந்தார்கள் என்றால் 25 பேர் இருப்பார்கள்.,கார் பார்க்கிங் நிழற்குடையும் பக்கத்தில் தான் இருக்கிறது என்றால் இல்லை கார் பார்க்கிங் மேலே இருக்கிறது நிழல் கூடைக்கு கீழே இருக்கிறது கார் பார்க்கிங்க்கும் நிழற்குடைக்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால், 75 மீட்டர் இருக்கும். அந்த சம்பவத்தில் எனக்கு ஏதும் எனக்கு ஏதேனும் காயங்கள் உண்டா என்றால், இல்லை. என் உடன் இருந்த நபர் பிரச்சனை இருப்பதால் அந்த பிரச்சினையை நான் தடுத்து விட்டேனா என்றால் நான் தடுத்து விட்டேன் அதில் என்னை யாரும் தாக்கவில்லை என்றால், ஆமாம். நான் அன்றைய தினம் அங்கு பணியில் இல்லை என்றால் சரியல்ல என்னை பார்த்து எதிரிகள் என்னை தெரியும் என்று சொல்லிவிட்டு சென்றார்கள். ஆனால் எனக்கு அவர்களை தெரியாது.பிரதீப் பாபுவை எனக்கு எவ்வளவு நாட்களாக தெரியும் என்றால் அவரை எனக்கு தெரியாது. எதிரிகளின் பெயர்களை யார் எனக்குச் சொல்லித் தந்தது என்றால் நான் பிரச்சனையின் போது ஃபோட்டோ எடுத்து காவல் நிலையத்துக்கு அனுப்பினேன் காவல் நிலையத்தில் உள்ளவர்கள் தான் அவர்கள் பெயர்களை எனக்கு சொன்னார்கள். எந்த காவல் நிலையத்திற்கு புகைப்படங்களை அனுப்பினேன் என்றால் marine காவல் நிலையத்திற்கு அனுப்பினேன். யாருக்கு புகைப்படங்களை அனுப்பினேன் என்றால் சுரேஷ் உதவி ஆய்வாளருக்கு அனுப்பினேன். எத்தனை மணிக்கு புகைப்படங்களை அனுப்பினேன் என்றால் பிரச்சனை தீர்ந்து மேலே ஏறும்பொழுது ஆறு மணி இருக்கும். அப்போது அனுப்பினேன். சுரேஷ் உதவி ஆய்வாளர் எதிரிகள் பெயர்களை எப்பொழுது என்னிடம் சொன்னார் என்றால் அடுத்த நாள் தான் சொன்னார். அடுத்த நாள் எங்கு

வைத்து சொன்னார் என்றால் எதிரிகளைப் பிடித்த பிறகு நான் போன் செய்து கேட்டேன், அப்போது சொன்னார். போலீஸ் என்னை விசாரிக்கும் பொழுது எவ்வளவு பேர்கள் இருந்தார்கள் என்றால் 25 பேர் இருந்தார்கள். போலீஸ் பொதுமக்களை விசாரித்தார்களா என்றால் அவர்கள் பிந்தி வந்ததால் தெரியாது என்று சொன்னார்கள். போலீஸ் விசாரணையில் சம்பவத்தை பொதுமக்கள் பார்த்தார்கள் என்று சொன்னேன் என்றால், சொன்னேன் ஆனால் போலீஸ் என்னை விசாரிக்கும் பொழுது அவர்கள் இல்லை. நான் நூறு மீட்டர் பள்ளத்தில் இருந்த கடற்கரையில் இருந்ததால் மேலே நடந்த விபரம் எனக்கு தெரியாது என்றால், தெரியும். நான் சொன்னது போல் சொன்ன இடத்தில் சொன்ன நேரத்தில் வைத்து சதாசிவத்திற்கு எந்த காயங்களும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. சதாசிவம் உணவு அருந்துவதற்கு செல்லும்போது ஏற்பட்ட வாகன விபத்தில் ஏற்பட்ட காயத்தை வைத்துக்கொண்டு அதனால் பணி தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்ற காரணத்தினால் நானும் சதாசிவமும் கூட்டு சேர்ந்து கொண்டு எதிரிகள் தாக்கியதால் காயம் ஏற்பட்டதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், இல்லை. நான் என்னுடன் பணி செய்யக்கூடிய சதாசிவம் என்பவருடைய நட்பின் காரணமாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், இல்லை. இரண்டாம் எதிரி நான் சொல்வது போல் அன்றைய தினத்தில் அந்த நேரத்தில் முட்டம் பீச்சுக்கு வரவில்லை என்றால் வந்தார்கள்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
**இரணியல்.**